# குளித்தலை நகராட்சி

27.08.2021.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ரா.ராதா,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.சு.மூர்த்தி, அவர்களின் ஜுலை–2021ஆம் மாதத்தின் 28.07.2021 முதல் 31.07.2021 வரை மற்றும் ஆகஸ்ட்–2021ஆம் மாதத்தின் 01.08.2021 முதல் 24.08.2021 வரையிலான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் திரு.ரா.ராதா அவர்களின் ஜுலை–2021ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் எண்ணிக்கை 66 ஆகும். தற்போது 35 தூய்மை பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். 31 தூய்மை பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. நகராட்சியின் வருவாயிலிருந்து 47% ஊதிய செலவினமாக மேற்கொள்ளப்படுகிறது. அதனடிப்படையில் தகுதியான எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்களை பணி நியமனம் செய்வதற்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1205/2021/அ4, நாள்–23.08.2021இல் தெரிவித்துள்ளபடி, கருணை அடிப்படையில் பணி வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1363/2021/சி1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் வாகனத்தை ஒப்படைப்புசெய்து பழுதுதினை நீக்கம் செய்தும், தகுதிச்சான்று பெற்று நகராட்சிவசம் ஒப்படைப்பு செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1,38,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.937/2021/எச்1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5370 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு டயர் மற்றும் டியூப் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின்மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.65,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1004/2021/எச்1)

..2..

பொருள்– 06. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12, கீழக்கொடிக்கால்தெருவில் வசித்து வருபவர்கள் வெளியூர் வேலைக்கு செல்வதால், நகராட்சிமூலம் குடிநீர் தண்ணீர் வழங்கும் நேரத்தில் பிடிக்க முடியவில்லை என்பதால், இந்தப்பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் வைத்து தருமாறு கூறியுள்ளார்கள். எனவே, தண்ணீர் தேவையை கருத்திற்கொண்டு உடனடியாக செய்வதற்கு வார்டு 12, கீழக்கொடிக்கால் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் வைக்க உத்தேச செலவினம் ரூ.1,85,000/– (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,85,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இப்பணிக்கு ஆகும் செலவினத்தை 2021–2022.ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.870/2021/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சியில் தினமும் குடிநீர் விநியோகம், குடிநீர் குழாய் பைப்புகள் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரிசெய்வது, மேலும் தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மூன்று நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். மேலும், இரண்டு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. அதற்கு பகல் மற்றும் இரவு நேரங்களுக்கு காவலர் பணிக்கு நபர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே, மேற்கண்ட பணியாளர்கள் மிகவும் அவசியம் தேவைப்படுவதால் இப்பணியினை மேற்கொண்டுவரும் பணியாளர்கள் 7 நபர்களை தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு (01.08.2021 முதல் 30.11.2021 வரை) நீட்டிப்பு செய்து பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2021–2022ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1066/2019/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால் உடைந்து கால்வாய் தண்ணீர் வீட்டின் ஓரமாக செல்வதால் பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும். பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படாதவாறு மேற்கண்ட குறைகளை சரிசெய்வது மிகவும் அவசியமாகிறது. மேற்கண்ட வாய்க்கால் கட்டும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.9,00,000/– (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) ஆகும். எனவே, வாய்க்கால் கட்டும் பணி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/–க்கு (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினத்தை 2021–2022.ம் நிதியாண்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1147/2021/இ1)

..3..

பொருள்– 09. குளித்தலை நகராட்சிமூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீர், ஆழ்துளை கிணறுகள் மற்றும் தெருவிளக்குகள் இவைகளை பராமரிக்க நகராட்சியில் நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால், பொதுமக்களின் அத்தியாவசிய பணிகளை உடன் செய்துகொடுக்க வேண்டியது மிகவும் முக்கியமான பணியாகும். எனவே, மேலே கண்டுள்ளபடி பணியாளர்களை நியமித்து பணி செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.9,25,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,25,000/–க்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இப்பணிக்கு ஆகும் செலவினத்தை 2021–2022ம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1146/2021/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான பெரியார்நகர் தலைமை குடிநீர் பம்பிங் கிணற்றில் இருந்து கரைக்கு சென்றுவர அமைக்கப்பட்ட பாலம் (Over Bridge) அதனை தாங்கும் பில்லர் மணலில் சற்று கீழ்நோக்கி இறங்கி உள்ளதால், அதன்மீது போடப்பட்ட கான்கிரீட் சிலாப் சற்று இறக்கமாக உள்ளது. இது உடனடியாக கவனிக்கத் தவறினால் பாலமும் தலைமை நீர் உந்து நிலையமும் பாதிக்கப்படும். அதனை தவிர்க்கும் நோக்கத்தில் உடனடியாக செய்து முடிக்க வேண்டியது மிகவும் அவசிமாகிறது. எனவே, இப்பணியினை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,80,000/–க்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இதற்கு ஆகும் செலவினத்தை 2021–2022ஆம் ஆண்டு 15.வது நிதிக்குழு திட்டத்தில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.876/2021/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி அலுவலக கணனிகள் மற்றும் பிரிண்டர்கள் ஆகியவற்றிற்கான வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.1,20,000/– மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.100, நாள்–30.11.2020இல் அனுமதி வழங்கியதன்பேரில், 05.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வ. எண்.<br>பணி விபரம்<br>ஒப்பந்ததாரர் / நிறுவனம் பெயர்<br>மதிப்பீட்டு சதவீதம்<br><br>1)<br><br>குளித்தலை நகராட்சி அலுவலக கணனிகள் மற்றும் பிரிண்டர்கள் ஆகியவற்றிற்கான வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல். கம்ப்யூட்டர் பார்க் | | | |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.56 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள கம்ப்யூட்டர் பார்க் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1485/2021/இ1)

பொருள்– 12. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.24817/ஜே3/2020, நாள்–13.07.2021.இல், நகராட்சியில் 20 ஆண்டுகளாக மாசற்ற முறையில் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு தங்கபதக்கம் வழங்கவேண்டும் எனவும், அதற்கான தொகையை தமிழ்நாடு கைவினை பொருட்கள் மேம்பாட்டுக்கழகம் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில், குளித்தலை நகராட்சியில் பணிபுரியும் திரு.ரா.தர்மலிங்கம், ஓட்டுநர் மற்றும் திரு.க.மணிவண்ணன், ஓட்டுநர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேற்படி ஒரு ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்க ஆகும் உத்தேச செலவு தலா ரூ.25,500/– வீதம் இருவருக்கும் ரூ.51,000/– செலுத்தவும், கோல்டுமெடல்கள் இரண்டு (4-Gram x 2) கொள்முதல் செய்யும்போது அன்றைய சந்தை நிலவரப்படி கூடுதல் தொகையை செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி செலவினம் மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4635/2018/சி1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு பணிக்கும், டெங்கு கொசு புழுக்களை ஒழிப்பதற்கும், மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் கொசுப்புழுக்களை ஒழிப்பதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 24 டெங்கு தடுப்பு பணியாளர்களை (DBC) ஸ்ரீசாய் மகளிர் சுயஉதவிக்குழுமூலம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு வீடுகளில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள 01.08.2020 முதல் 31.07.2021 வரை காலம் நிறைவடைவதால், மேற்கண்ட பணியினை 01.08.2021 முதல் 31.05.2022 வரை நீடித்துக்கொள்ள, 2020–2021 மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு எண்.இ1/4822/2020, நாள்–05.06.2020இன்படி நாள் ஒன்றுக்கு ஒரு(1) நபருக்கு தினக்கூலி ஊதியம் ரூ.362/– வழங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,00,000/–க்கு (ரூபாய் இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினம் 2021–2022ஆம் ஆண்டு நிதியில் ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1326/2017/எச்1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு சத்தியமங்கலம் கிராமத்தில் உள்ளது. மேற்படி இடத்தில் வெர்மி கம்போஸ்ட் (Vermy Compost) கட்டப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையில், தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இந்நகரில் உருவாகும் குப்பைகளை பிரித்து வாங்கப்பட்டு உரம் தயாரிக்கும் இடத்தினை சரிசெய்தால் மட்டுமே குப்பைகளை சரிசெய்ய முடியும். அதனால், மேற்கண்ட இடத்தில் இடிந்து விழுந்ததை சரிசெய்யவும், தண்ணீர் வசதியும் தேவைப்படுகிறது. எனவே, அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.8,50,000/–க்கு (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயார் செய்து பணி செய்வதற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 15ஆம் நிதிக்குழு திட்ட நிதியியில ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1441/2021/இ1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் ஏதாவது ஒரு பூங்காவை மேம்படுத்த வேண்டி பெரியார்நகர் பகுதியில் அமைந்துள்ள பூங்காவையும், எரிவாயு தகன மேடை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை வைத்ததின்பேரில், எரிவாயு தகன மேடை அமைக்கவும் அரசு மூலம் கோரிக்கை வைத்ததின்பேரில், பூங்கா அமைக்க மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கும், எரிவாயு தகன மேடை அமைக்க ரூ.150.00 இலட்சத்திற்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை செய்ய அரசு நிர்வாக அனுமதி வேண்டி கடிதம் வைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1357/2021/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி 24 வார்டுகளிலும் உள்ள வீடுகளிலிருந்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து பெற்றுவர இந்நகராட்சிமூலம் 14–மின்கல வாகனங்கள் (Battary Operator Vehicle) பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட வாகனங்களில் 10 வாகனங்கள் பழுதடைந்துள்ள காரணத்தால், அதனை இயக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் குப்பைகள் தரம் பிரிப்பதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. மேலும், உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா நோய் தொற்று காலத்தில் தங்கு தடையின்றி தூய்மை பணி மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மின்கல வாகனங்களின் பழுதுகளை உடன் சரிசெய்ய பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினம் 2021–2022 பொது நிதி அல்லது திட்ட நிதியின்மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1366/2021/எச்1)

பொருள்– 17. இந்நகராட்சி 2021–2022.ஆம் ஆண்டுக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், கணனி பிரிவிற்கு தேவையான பேப்பர்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றினை அவ்வப்போது தேவைக்கேற்ப, அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோசர்வ், 107–முதல்தளம், என்.எஸ்.காம்ப்ளக்ஸ், 25ஏ–சுந்தரதாஸ்குளத்தெரு, திருச்சிராப்பள்ளியில் வாங்கி பயன்படுத்திக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/–த்திற்கும் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1660/2020/காசாளர்)

பொருள்– 18. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டார்மெயின்ரோடு தினசரி நாளங்காடியில், சுமார் 21 வருடங்களுக்குமுன்பு கட்டிய கட்டிடத்தின் முதல்தளத்தில் அமைந்துள்ள 4 கடைகள், நகராட்சிமூலம் வாடகைக்கு விடப்பட்டது. மேல்தளமாக இருந்ததால் பொதுமக்கள் அதிகளவில் வராத காரணத்தால் குத்தகைதாரர் மேற்படி கடையை தொடர்ந்து நடத்த இயலாமல், 31.03.2016இல் நகராட்சிவசம் ஒப்படைத்துவிட்டார். பிறகு, மேற்கண்ட கடைகளுக்கு பலமுறை பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், ஒருவரும் ஏலத்தில் கலந்துகொள்ள முன்வரவில்லை. 5 வருடங்கள் பூட்டிய நிலையில் உள்ளது. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட காரணமாக அமைவதால், கட்டிடத்தின் தற்போதைய தன்மையை ஆய்வுசெய்து, பொறியியல் பிரிவு மூலம் பொதுப்பணித்துறை Scheudle-2020-2021.இன்படி கடை ஒன்றுக்கு ரூ.880/– என மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொது ஏலம் / பொது ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.348/2008/அ1)

..6..

பொருள்– 19. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் தொடர்பாக 24 வார்டுகளிலும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழைகள், விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருபவர்களின் விபரங்களை சேகரித்து, இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி மேற்கொள்ள அரசாணை(நிலை) எண்.170, நாள்–27.10.2020இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்வதற்கு ஒரு குடும்ப கணக்கெடுப்பிற்கு (கணக்கெடுப்பு மற்றும் இணையதளத்தில் பதிவேற்றம், அச்சுக்கூலி உட்பட) ரூ.15/– வீதம் செலவினம் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட பணிகளை சாந்தி பிரவுசிங் சென்டர், குளித்தலை நிறுவனத்தின்மூலம் 3531 குடும்பங்களின் கணக்கெடுப்பு பணி முடிக்கப்பட்டமைக்கு (கணக்கெடுப்பு மற்றும் இணையதளத்தில் பதிவேற்றம், அச்சுக்கூலி உட்பட), செலவினம் (3531 Nos x Rs.15.00=52965.00) ரூ.52965/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1613/2020/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

27.08.2021.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 221 | பதிவு செய்யப்படுகிறது. |
| 2 | 2 | 222 | பதிவு செய்யப்படுகிறது. |
| 3 | 3 | 223 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 224 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 225 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 226 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 227 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 228 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 229 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 230 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 231 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 232 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 233 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 234 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 235 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 236 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 237 | அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 18 | 238 | அனுமதிக்கப்பட்டது. |
| 19 | 19 | 239 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–ரா.ராதா,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.